திருவள்ளூர் மாவட்டம் மணவாளநகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் மாநில அளவிலான சர்வதேச முதியோர் தின விழாவில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், ஆகியோர் கலந்துகொண்டு 85 வயது முதியவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்து அதேபோல் மெலிந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மேம்பாட்டு மகளிர் திட்டம் மூலம் சிறப்பு ஊட்டச்சத்து உணவு பொருட்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் உடன் சமூக நல அலுவலர்கள் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் கழக நிர்வாகிகள் அரசு துறை அதிகாரிகள் முதியோர்கள் குழந்தைகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் கிராம சபைக் கூட்டம்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், அக். 16 – நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்களபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே தமிழக முதல்வரின் கிராமங்கள் தோறும் கிராம சபை கூட்டம் காணொலிக் காட்சி தொடங்கி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். மேலும் பொது மக்கள் இடத்தில் மனுக்களை பெற்று கடந்த தமிழக அரசின் நலத் திட்டங்கள், தமிழக முதல்வரின் பல்வேறு சிறப்பு மிகு திட்டங்கள் குறித்தும் பொதுமக்களிடத்தில் எடுத்து கூறினார். தொடர்ந்து இந்த அரசு மக்களுக்காக பல்வேறு அரசு நலத் திட்டங்களை வழங்கி வருகிறது அதனை பொதுமக்கள் பயன்படுத்தி நீங்கள் சிறப்பாக வாழ்க்கை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஒன்றிய கழகச் செயலாளருமான கே.பி. ராமசுவாமி, திட்ட இயக்குனர் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம ஊராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகம் ஒன்றிய செயலாளர் ஜி.தம்பு தலைமையில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், மாவட்ட கவுன்சிலர் மாலதி ஆகியோர் கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் கழக உறுப்பினர்கள் டி.ஆர். நாராயணன், சிவபெருமான், வேணு, பத்மா, சிலம்பரசன், கோபி, நந்தகோபால், இளம்பரதி, பவகர்ணன், சந்துரு, பாஸ்கர், ஹரிதாஸ், சீனிவாசன், சரத்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நான்கு ஆண்டுகளில்

ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் 352 திருக்கோயில்களில் திருப்பணிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்!

சென்னை,அக்.16- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (15.10.2025) வினா - விடை நேரத்தின்போது. இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு . சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் மு.பன்னீர்செல்வம். குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜி. பிரின்ஸ். சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ். ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

மு.பன்னீர்செல்வம்: சீர்காழி தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நாங்கூர் பெருமாள் கோயிலிலில் திருமணக்கூடம் அமைக்க அரசு ஆவனசெய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர் பாபு : உறுப்பினர் கோரிய அருள்மிகு நாங்கூர் பெருமாள் கோயிலில் புதிய திருமண மண்டபம் கட்டுவது தொடர்பான வழக்கு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வருகின்ற நவம்பர் 19 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைக்கப் பெற்றவுடன் அந்த திருமண மண்டபத்தினை கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.பன்னீர்செல்வம் : அமைச்சர் இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தாக தெரிவித்துள்ளார்கள். அது எப்போது முடிவடையும் என தெரியவில்லை. எனது சீர்காழி தொகுதிக்குட்பட்ட நாங்கூர் அருள்மிகு நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் சுவாமி வீதியுலா வருவதற்கு சப்பரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த சப்பரம் தற்போது பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதற்கு பதிலாக புதிய திருத்தேர் ஒன்றினை அமைத்து தருவாரா என்றும். திருமயிலாடி அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திருக்குளம் நீண்டகாலமாக தூர்வாரப்படாமல் உள்ளதை தூர்வாரிக் கொடுத்து. அதற்கு தடுப்புச் சுவர் அமைத்து தர முன்வருவாரா என தங்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு: உறுப்பினர் கோரிய நாங்கூர் அருள்மிகு நாராயணப் பெருமாள் திருக்கோயிலின் சப்பரம் பழுதாகி உள்ளது உண்மைதான். உடனடியாக அந்த சப்பரத்தை சீரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். திருக்தேர் வீதி உலா வருவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு. இருப்பின் உறுப்பினர் கோரிய திருத்தேரும் செய்து தரப்படும். அதுபோல திருமயிலாடி அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திருக்குளமானது ஒரு ஏக்கர் 27 சென்ட் பரப்பளவில் அமைந்துந்துள்ளது. அந்த குளத்தை தூர்வாரி, தடுப்புச் சுவர் கட்டும் பணி இந்தாண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு, 6 மாத காலத்திற்குள் முடித்து தரப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.பன்னீர்செல்வம் : திருப்புங்கூர் அருள்மிகு சிவலோகநாதர் ஆலயத்தில் தற்போது திருப்பணி நடைபெற்று வருகிறது. எப்போது குடமுழுக்கு நடத்தப்படும் என அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு: இந்த மன்றத்திற்கு சொல்லவேண்டிய ஒரு தகவல். ஆயிரம் ஆண்டு திருக்கோயில்கள் என்பது மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட பொக்கிஷங்கள் ஆகும். அந்த திருக்கோயில்கள் புனரமைத்து பாதுகாக்கப்ப வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து எந்த காலத்திலும் ஏற்படாத ஒரு எண்ணம் முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உதித்திட்டதன் காரணமாக ஆண்டிற்கு ரூ. 100 கோடி வீதம் இதுவரை ரூ. 425 கோடிரூபாயினை அரசின் சார்பில் நிதியாக வழங்கினார்கள். இத்துடன் கூடுதலாக உபயதாரர் நிதி. பொதுநல நிதி மற்றும் திருகோயில் நிதி சேர்த்து ரூ. 571.55 கோடி மதிப்பீட்டில் சுமார் 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு. அதில் 71 திருக்கோயில்களுக்கு இதுவரை குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதர ஆயிரம் ஆண்டு திருக்கோயில்களின் பணிகளை விரைவுபடுத்தி குடமுழுக்கை முடித்து ஒரு வரலாற்று பெருமையை படைத்து இந்த மாமன்றத்தில் தெரிவிப்போம். உறுப்பினர் கோரிய அந்த திருக்கோயிலின் திருப்பணி 80 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. வரும் ஜனவரி மாத இறுதியில் அந்த திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ.ஜி. பிரின்ஸ்: எனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இரணியல் கிராமம். வேணுகோபால கிருஷ்ணன் கோயில். தலக்குளம் கிராமம் பெருமாள் கோயில் ஆகிய இரண்டு கோயில்களும் ஆயிரம் ஆண்டுகளை தாண்டியிருக்கிறது. இங்கு வழிபடக் கூடிய மக்கள் கோயில் பராமரிக்கப்படாமல் உள்ளது என்றும். திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த முயற்சிக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அந்த பணிகளை செய்திட முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு : இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றை கூற விரும்புகின்றேன். கடந்த காலங்களில் திருப்பணி என்பது. ஒரு 15 ஆண்டுகாலத்தை சீர்தூக்கி பார்த்தால் குறைவான அளவிற்குதான் உபயதாரர்கள் நிதியின் வாயிலாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆட்சியின் நான்கரை ஆண்டு காலத்தில் ரூ.1,520 கோடியினை உபயதாரர்கள் நிதியாக தந்திருக்கிறார்கள். அதற்கு காரணம் உபயதாரர்களின் நேர்த்திக் கடனையும். விரும்புகின்ற பணிகளை ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதற்கு இந்த அரசிடம் கோரிக்கை வைத்தவுடன் உடனடியாக அதற்கு அனுமதி தருவதோடு மட்டுமல்லாமல். உபயதாரர்களையே அந்த திருப்பணிகளை செய்வதற்கு அனுமதி அளித்ததன் விளைவாக ரூ.1,520 கோடி அளவிற்கு உபயதாரர் நிதி வரப்பெற்றிருக்கிறது. உறுப்பினர் கூறிய உபயதாரர் நிதி உடனடியாக திருக்கோயில் வசம் ஏற்றுக் கொள்ளப்பட்டு. அந்த பணிகளை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். அரவிந்த் ரமேஷ் : சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி பெருமாள் கோவில் இடம். ஒக்கியம் துரைப்பாக்கம் உத்தண்டி போன்ற ஓஎம்ஆர். ஈசிஆர் ஒட்டிய பகுதிகளில் அறநிலையத்துறைக்கு சொந்தமான இடங்களில்

ஏழை. எளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அதிநவீன திருமண மண்டபங்கள் கட்டித் தந்து ஏழை. எளிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு: : திருமண மண்டபங்களை பக்தர்களின் நேர்த்திக் கடனுக்காவும். இந்துகளின் திருமணங்கள் நடைபெற வேண்டும் என்பதற்காகவும். அதே நேரத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 82 திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருந்தார்கள். நல்ல மனம் கொண்டோர் சிலர் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு தீட்டுகின்ற திட்டங்களால் அந்த திருமண மண்டபங்களை கட்டுவதற்கு தடையாணை வழங்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக சட்டப்போராட்டம் நடத்தி. மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கில் வென்று. உறுப்பினர் கோருகின்ற திருமண மண்டபங்களை கட்டித் தருவதற்கான முயற்சிகளை இந்த ஆட்சி எடுக்கும் என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் மனோஜ் பாண்டியன் : ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியிலுள்ள திருக்கோயில்களை சீரமைப்பதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் இரண்டரை இலட்சத்தை மூன்று இலட்சமாக உயர்த்தி தரப்படும் என கடந்த முறை நான் பேசிய போது அமைச்சர் உத்தரவாதத்தை தந்தார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம் கட்டுமானங்களுக்கான செலவினங்கள் கூடுகின்ற வேளையில் அந்த செலவினங்களை அடிப்படையாக கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கப்படுமா என கேட்டு. அமைச்சர் பாப்பான்குளம் கருத்தீஸ்வரர் திருக்கோயிலையும். பூலாங்குளம் உச்சிமாகாளியம்மன் கோயிலையும் பார்த்து சென்றீர்கள். அந்த திருக்கோயில்களுக்கான நிதியும் இந்தாண்டு உயர்த்தப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு: பாப்பான்குளம் அருள்மிகு கருத்தீஸ்வரர் திருக்கோயில் மற்றும் பூலாங்குளம் உச்சிமாகாளியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்களாக இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று ரூ. 2.70 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் கோரிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதி திருக்கோ யில்களை பொறுத்தளவில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்பு. திருக்கோயில்களின் திருப்பணிகளில் ஒரு அமைதிப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். கடந்த ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிடர் பகுதி மக்கள் வாழும் பகுதி திருக்கோயில்கள் மற்றும் கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு ஆண்டிற்கு தலா 1000 திருக்கோயில்கள் என எடுத்து கொள்ளப்பட்டு நிதியுதவியாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 10 ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக 4 திருக்கோயில்களுக்குதான் திருப்பணி நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின். 1000 ஆதிதிராவிடர் பகுதி மக்கள் வாழும் பகுதி திருக்கோயில்கள் மற்றும் 1000 கிராமப்புறத் திருக்கோயில்களின் எண்ணிக்கை தலா 1,250 ஆக உயர்த்தியதோடு. திருப்பணி நிதியுதவி ரூ. 2 இலட்சமாக உயர்த்தப்பட்டது. முதல் ஆண்டிலேயே 2,500 திருக்கோயில்களுக்கான நிதியுதவியையும் ஒரே இடத்தில் மாபெரும் விழாவினை நடத்தி வழங்கிய பெருமை நமது முதலமைச்சர் அவர்களை சாரும். அதன் பின்னர் நிதியுதவித் தொகை 2 இலட்சம் ரூபாய் தற்போது இரண்டரை இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 10,000 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்து இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்த சரித்திர சாதனை எந்த காலக்கட்டத்திலும் நடைபெற்றதில்லை. இந்த 4 ஆண்டுகளில் இப்படிப்பட்ட ஒரு அமைதியான திருப்பணி புரட்சி நடத்திய ஆட்சியை ஆன்மிக ஆட்சி என ஆன்மிகவாதிகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர் என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு – 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில்

5308 பணியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான போனஸ் - கருணைத் தொகை!

வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு – அமைச்சர் இரா.இராஜேந்திரன் நன்றி!

சென்னை,அக்.16- சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சென்னை,அக்.16-

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் குடும்பத்தினருடன் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி - II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33 % மற்றும் கருணைத் தொகையாக 11.67 % என மொத்தம் 20 % போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33 % மற்றும் கருணைத் தொகையாக 1.67 % என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5308 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ. 353.37 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு / பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கி உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையில்

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் தேர்தல் 2026 ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவிப்பு!

சென்னை, அக்.16- சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் வே.தேவேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றாசு தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணியின் தலைவர் திருமதி. சி.சியாமளா, துணைத் தலைவர் மோ. பாலச்சந்தர் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்களின் ஆலோசனைக் கூட்டம், சென்னை, நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (16.10.2025) மாலை 7.00 மணியளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி தலைவர்கள், பகுதி துணைத்தலைவர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

பொருள் : வரும் சட்டமன்றத் தேர்தல் 2026ல் சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் உள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளான சேப்பாக்கம். திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணாநகர் தொகுதிகளுக்கு வழக்கறிஞர் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DLC) சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) மற்றும் முதல் நிலை பாக ஒருங்கிணைப்பாளர் (FLC) காக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்கள் எவ்வாறு கழகப்பணியாற்றுவது குறித்து ஆலோசனையும் மற்றும் மாவட்ட வழக்கறிஞர்களுக்கு திமுக சட்டத் துறையினரால் வழங்கப்பட்ட வழக்கறிஞர் உறுப்பினர் அட்டையினையும் வழங்குகிறார்.

இவ்வாறு வே.தேவேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள்

"கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதுக்கு விண்ணப்பிக்கலாம்!

செய்தி மக்கள் தொடர்புத்துறை அறிவிப்பு!

சென்னை, அக் 16- "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதுக்கு 2024 மற்றும் 2025-ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதிற்குத் தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருது 2022-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்" விருதுக்குத் தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு:

"நடிகர், நடிகையர், இயக்குநர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசனகர்த்தா, இசையமைப்பாளர், பாடலாசிரியர், பின்னணிப் பாடகர் மற்றும் பாடகி, ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், கலை இயக்குநர், ஒலிப்பதிவாளர், சண்டைப்பயிற்சியாளர், நடன ஆசிரியர், ஒப்பனைக் கலைஞர் மற்றும் தையற் கலைஞர் எனத் தமிழ்த் திரைப்பட உலகிற்கு மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றிய வாழ்நாள் சாதனையாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்தவராகக் கருதப்படுவர்."

இவ்விருதிற்குரிய விண்ணப்பப் படிவத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளத்தில் (www.dipr.tn.gov.in) இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விரிவான விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை/ உறுப்பினர்-செயலாளர், திரைப்படத் துறையினர் நலவாரியம் முதல் தளம், மாநிலச் செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், வாலாஜா சாலை, சென்னை-600002 என்ற முகவரிக்கு 14.11.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பிட வேண்டுகிறோம்.

இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் அறிவுறுத்துடன் படி ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய – இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் பணிகள் குறித்து சென்னை தெற்கு மாவட்டம் இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கோட்டூர் எஸ். பிரகாஷ் ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட அமைப்பாளர் திருவாசகம், துணை அமைப்பாளர் நித்தின், மதன், பிரசாந்த், கொடி பாலா, கோர்ட் அருண் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கண்டோன்மெண்ட் நகர செயலாளர்

டி.பாபு சகோதரி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி

சென்னை,அக்.16- கண்டோன்மெண்ட் நகர செயலாளர் டி. பாபுவின் மூத்த சகோதரி கீதா வேணுகோபால்(வயது 73) நேற்று மாலை காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் மறைந்த கீதா வேணுகோபாலுக்கு 1மகனும் 1மகளும் உள்ளனர்.

அன்னாரது இறுதி சடங்குகள் இன்று 16ஆம் தேதி பிற்பகல் 3:00 மணியளவில் கவுல்பஜார் இடுகாட்டில் நடைபெறஉள்ளது, அவரது மறைவு செய்தியரிந்தவுடன் கண்டோன்மெண்ட் நகர கழகத்தினர் நேரில் வந்து அன்னாரது உடலுக்கு மலர் மலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் சாலமங்கலம், ஒரத்தூர், படப்பை, மணிமங்கலம், கரசங்கால், சேத்துப்பட்டு, மலைப்பட்டு ஊராட்சிகளுக்குட்பட்ட 37 பாகத்திற்கான கிளைசெயலாளர்கள், பாக நிலைமுகவர்கள் (B.L.A 2), பாக டிஜிட்டல் முகவர்கள்(B.D.A.) ஆலோசனைக்கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆலோசனை வழங்கினார். இதில் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.